சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 02.08.2023

SC.NO. 37/2023

PW2 : திரு. விவேகானந்தம் (வயது 29 ) த/பெ. ராஜமோகன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

( எதிரி இன்று ஆஜர்)

<u>**முதல் விசாரணை**</u>

நான் காளியம்மன் கோவில் தெரு முள்ளாலில் வசித்து வருகிறேன் . நான் நாமக்கல்லில் சிவில் இன்ஜினியராக வேலை பார்த்து வருகிறேன் . அ.சா.1 எனது அன்னண் ஆவார் . கார்த்திக் என்பவர் எனது பெரியம்மா மகன் தான். அவர் இறந்துவிட்டார். வெற்றிச்செல்வி எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரியை தெரியும் அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான் . 14.06.2022, 15.06.2022, 16.06.2022 வரை எங்கள் ஊரில் காளியம்மன் கோவில் திருவிழாவிற்கு 13.06.2022 அன்று எங்கள் கிராமத்திற்கு வந்தேன். 15.06.2022 அன்று இரவு 08 மணிளவில் நானும் கார்த்திக் , ஹரிபிரசாத் ஆகியோர் ஆலங்குடி மகாஜனம் ரோட்டிற்கு பாத்ரூம் செல்லாலம் என சென்று கொண்டிருந்தோம் , பாத்ரூப் போய்விட்டு வரும் போது மழை பெய்ததால் முள்ளால் பஸ் ஸ்டாப்பில் மழைக்காக ஓதுங்கி உட்கார்ந்திருந்தோம். அப்போது கார்த்திக்கு போன் கால் வரவே அவர் போன் பேசி கொண்டிருந்தார். ஆஜர் எதிரி ஜெகன் அப்போது அங்கு வந்து போனை கொடு என்று கேட்டார். அதற்கு அவர் காத்திருங்கள் போன் பேசி கொண்டிருக்கிறேன் அவசரமா என்று சொன்னார் . போன் பேசி முடித்த

பிறகு ஆஜர் எதிரியிடம் கார்த்திக் நீங்கள் யாருங்கள் என்னிடம் வந்து போன் கேட்கிறிர்கள் என்று கேட்டார். அதற்கு ஆஜர் எதிரி போன் கேட்ட தர முடியாதா நீ எந்த ஊரு வெளியூர் காரன் தானே என்று சொல்லி கெட்ட வார்த்தையால் தேவடியா மவனே, புண்டை மவனே, என்று சொல்லி கார்த்தியை ஆஜர் எதிரி திட்டினார் . போன் கேட்டால் கொடுக்கமாட்டீயா என்று சொல்லி, தேவடியா புண்டை மவனே என்று சொல்லி இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி , ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து இத்தோடு சாவுடா என்று சொல்லி கார்த்திக்கின் உதடு , தவாங்கட்டையிலும்,வலது கை தோள் பட்டையிலும் , நெஞ்சின் நடுபகுதியிலும், வயிற்றின் இடது புறத்தில் விலா பக்கத்திலும் , கத்தியால் குத்தினான். கழுத்தில் இரத்த காயம் ஏற்பட்டது . நாங்கள் சத்தம் கேட்டு அங்கு போகவும் ஆஜர் எதிரி அந்த கத்தி உடன் அங்கிருந்து ஓடிவிட்டார் . பின்னர் பைக்கில் கார்த்திக்கை நடுவில் உட்கார வைத்து கொண்டு இலால்குடி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனம் மூலம் நாங்கள் சிகிச்சைக்கு சேர்த்தோம். அப்போது மருத்துவரிடம் யோகராஜ் தான் நடந்த விபரங்களை கூறினார். நாங்கள் அப்போது கார்த்திக்கு முதலுதவி சிகிச்சை அளித்து கொண்டிருந்தோம் . மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு கார்த்திக்கை கொண்டு சேர்த்தோம் அவர் அங்கு உள் நோயாளியாக இருந்தார். அப்போது அங்கு வந்த இலால்குடி போலிசார் கார்த்திகிடம் புகாரில் கையெழுத்து வாங்கினார் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கண்ட அ .த.சா.ஆ.1 கையெழுத்து கார்த்திக்குடையதாகும். இது சம்மந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் நடந்த இடம் முள்ளால் பஸ் ஸ்டாப்பாகும். சம்பவ நாள் அன்று அங்கு லைட் கிடையாது என்றால் சரிதான் . சம்பவம் நடந்த அன்று நான், கார்த்திக் எனது அண்ணன் ஆகியோர் பேசி கொண்டிருந்தோம் . அப்போது கார்த்திக்கு போன் வரவே 15 அடி தள்ளி பேசி கொண்டிருந்தார். கார்த்திக் பேசி கொண்டிருந்ததை என்னால் பார்க்க முடிந்ததா என்றால் பார்க்க முடிந்தது. சம்பவம் சுமார் எவ்வளவு நேரம் அவர்களுக்கிடையே நடந்தது என்றால் இரண்டு நிமிஷம் முதல் ஐந்து நிமிஷம் நடந்தது . சம்பவத்தை பார்த்த நாங்கள் ஏன் விலக்கவில்லை என்றால் ஊர் பையன் என்பதால் வாய் வார்த்தை பேசி கொண்டிருந்தது முடிந்துவிடும் என்று நாங்கள் விலக்கவில்லை. அவ்வாறு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் நாங்கள் விலக்கியிருப்போம் என்றால் அது சரியல்ல . கார்த்திக்கை முதலுதவிக்கு சேர்த்த போது மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் சுமார் 10 நிமிடம் இருந்தோம் . முதல் சிகிச்சை செய்த போது கார்த்திக் , நான் அரிபிரசாத், யோகராஜ் ஆகியோர் அங்குதான் இருந்தோம் என்றால் சரிதான். சம்பவமே நடக்கவில்லை என்றாலும் அப்படி நடந்திருந்தால் மருத்துவரிடம் ஜெகன் குத்தியதாக சொல்லியிருப்போன் என்றாலும் அப்படி நடக்கதாதால் தான் அடையாளம் தெரியாத நபர் குத்தியதாக மருத்துவரிடம் சொன்னோம் என்றால் சரியல்ல . எங்களிடம் மருத்துவர் கேட்கவில்லை. திருச்சி அரசு மருத்துவமனையில் நானும் எனது அண்ணனும் சேர்ந்து கார்த்திக்கை சிகிச்சையில் சேர்த்தோம் . மருத்துவமனையில் நான் தான் கார்த்திக்கை கொண்டு போய் சேர்த்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நானும் என் அண்ணனும் தான் கொண்டு போய் சேர்த்தோம் . நான் தான் சிகிச்சையில் சேர்த்துள்ளேன் என்றாலும் விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரியாத

நபர் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அது சரியல்ல . அன்றைய தினம் எங்கள் ஊரில் கடைசி நாள் திருவிழா என்றால் சரிதான். அன்றைய தினம் ஆர்க்கேஸ்டாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். சுற்றியுள்ள கிராமத்திலிருந்து திருவிழா பார்க்கவருவார்கள் என்றால் சரிதான் . திருவிழாவிற்கு சுமார் 50 பேருக்கு டீ சர்ட் அடித்திருந்தார்கள். அதில் கார்த்திக்கு டீ சர்ட் அடிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு போலிசார் எப்போது கிராமத்திற்கு வந்தார்கள் என்றால் நான் கேள்விபடவில்லை . ஆனால் போலிசார் வந்ததாக சொன்னார்கள். டீ சர்ட் போட்டவர்களை கூப்பிட்டார்களா என்றால் அது எனக்கு தெரியவில்லை . பசங்களை கூப்பிட்டார்கள் . போலிசார் கார்த்திகிடம் திருச்சியில் வைத்து இரவு 10.30 மணிக்கு மேல் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் போலிசார் போலிஸ் ஸ்டேஷனில் வைத்து வாக்குமூலம் வாங்கினார்கள் . அதன் பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சம்பவத்திற்கு மறுநாள் எங்கள் ஊரில் வந்து சம்பவ இடத்தில் விசாரணை செய்தார்கள் . அப்போது நேரம் என்ன இருக்கும் என்றால் 10.30 முதல் 11 மணி இருக்கும் . யார் விசாரித்தார்கள் என்றால் பெண் போலிசும் ஆண் போலிசும் விசாரித்தார்கள். இன்ஸ்பெக்டர் எப்படி இருப்பார் என்றால் எனக்கு தெரியாது. கார்த்திகின் உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் அது சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் திருவிழாவை பார்க்க வந்த யாரோ தான் கார்த்திக்கை குத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல . சம்பவம் நாளன்று ஜெகனுக்கு அடிப்பட்டதை தெரிந்து கொண்டீர்களா என்றால் அது பற்றி தெரியாது . சம்பவ நாளன்று எதிரிக்கு அடிப்பட்டதால் சம்பவம் நடக்க வாய்ப்பில்லை என்றால் அது சரியல்ல. சம்பவம் நடந்த அன்று நான்

அரிபிரசாத், கார்த்திக் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும் கார்த்திக் அங்கு தனியாக தான் இருந்தார் என்றாலும் சரியல்ல . ஜெகன் மீது உள்ள முன் விரோதம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முன் விரோதம் கிடையாது.

/signed/

விவோகனந்தம்

/signed/

திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.